சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 14.08.2025 OS. 135/2017

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பெருமாள் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | அம்மாவாசை | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | CW1 | | | |

-----------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை</u>

நான் மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்து கடந்த 31.01.2024 ல் ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 14.12.2022 ம் தேதியில் இந்த நீதிமன்றத்தில் இருந்து D.No 1413/2022 நாள் 14.12.2022 என்று குறிப்பிடப்பட்ட நீதிமன்ற கடிதத்துடன் IA No. 115/2020in OS.No.135/2017 வழக்கு தொடர்புடைய ஆவணங்களை நீதிமன்ற ஆணையர் திருமதி. அனுசியாதேவி அவர்கள் மூலமாக எங்கள் ஆய்வகத்திற்கு பெறப்பட்டது. பெறப்பட்ட ஆவணங்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு என்னுடைய ஆய்வுக்காக கீழ்க்கண்டவாறு ஒத்துக்கொண்ட கையொப்பத்தையும், கேள்விக்குறிய கையொப்பத்தையும், ஆய்வு செய்தேன்.

1. Register ல் உள்ள ஒத்துக்கொள்ளப்பட்ட M.தங்கராசு என்பவரால் ஒத்துக்கொள்ளப்பட்டதாக கூறப்படும் கையொப்பங்களுக்கு A1 –A5 வரையிலும்,

2. ஒரு முழு தாளில் போடப்பட்ட தங்கராசு என்பவருடைய மாதிரி கையொப்பங்களுக்கு S1 –S6 என கொடுத்தேன்.

3. மேலும் ஒரு புரோநோட்டில் போடப்பட்டிருந்த கேள்விக்குறிய கையொப்பத்திற்கு Q என குறியீடு செய்தேன். அவ்வாறு குறியீடு செய்யப்பட்ட கேள்விக்குறிய மற்றும் ஒத்துக்கொள்ளப்பட்ட கையொப்பங்களை புகைப்படம் எடுத்து hand lens மற்றும் நவீன கருவிகளின் உதவியுடன் முழுவதும் கவனமாக ஆய்வு செய்து கீழ்க்கானும் முடிவுக்கு வந்தேன்.

4. A1–A5 வரையிலும், S1–S6 வரையிலும் குறியீடு செய்யப்பட்ட தங்கராசுவின் ஒத்துக்கொள்ளப்பட்ட கையொப்பங்களை எழுதிய நபர் Q என்று குறியீடு செய்த கேள்விக்குறிய கையொப்பத்தை போடவில்லை என முடிவுக்கு வந்தேன். மேல்கண்ட ஆய்வு முடிவினையும், ஆய்வுக்கான காரணங்களையும், குறிப்பிட்டு ஆவண ஆய்வு எண்.225/2022 நாள் 31.07.2022 இந்த ஆவணத்தையும் ஆய்வறிக்கையும்

நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்தேன். அது, நீதிமன்ற சான்றாவணம் 1 ஆகும்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் தடய ஆய்வு செய்ய தகுதியான படிப்பு படித்துள்ளேன். ஒரு நபருடைய கையொப்பம் வருடத்திற்கு வருடம் மாறுபடும் என்றால் இயற்கையாக மாறுபடும். ஒரு நபருடைய மனநிலையை பொறுத்து அவருடைய கையெழுத்து மாறுபடும் என்றால், இயற்கையாக மாறுபாடு வரும். ஆனால் அவருடைய அசல் கையெழுத்து முற்றிலும் வேறுபடாது. ஒரே நேரத்தில் ஒருவர் 10 கையொப்பம் போடும்போது இயற்கை மாறுபாடு இருக்கும். A1–A5, S1–S6 ஆகிய ஒத்துக்கொள்ளப்பட்ட கையொப்பங்களில் மாறுபாடு ஏதேனும் கண்டுபிடித்தேனா என்றால் இயற்கை மாறுபாடு இருப்பை எனது அறிக்கையில் கண்டுபிடித்தேன். ஆனால் அந்த கையெழுத்துக்கள் ஒன்றுக்கு ஒன்று ஒத்துப்போனது. நேராக கையெழுத்து போடும் நபர் நேராகவும், சாய்ந்து கையெழுத்து போடும் நபர் சாய்ந்து கையொப்பம் போடுவார் என்றால் அது கையெழுத்து போடும் நபரை பொறுத்து மாறுபடலாம். நான் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட (த) என்ற எழுத்து ஒத்துக்கொண்ட நோட்டில் சற்று வளைவாக உள்ளது என்றால் சரிதான். A2–A5 கையெழுத்துகளிலும் (த) என்ற எழுத்து ஒத்துக்கொண்ட நோட்டில் சற்று வளைவாக உள்ளது என்றால் சரிதான். S1–S6 கையெழுத்துகளிலும் (த) என்ற எழுத்து நேராக உள்ளது என்றால், நேராக உள்ளது. ஆனால், அது இயற்கையான மாறுபாடு தான். சாய்ந்து எழுதும் எழுத்தும், நேராக உள்ள எழுத்தும் இயற்கையான மாறுபாடாக எடுத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். என்னுடைய காரண காரிய அறிக்கையில் மேற்படி (த) என்ற எழுத்து மாறுபாடு குறித்து சொல்லவில்லை, பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் முறையாக கையெழுத்துக்களை ஆய்வு செய்யாமல் என் ஆய்வு அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. A1–A3 initial M எழுத்து தெளிவாக உள்ளது என்றால் சரிதான். A4 ல் inititial M என்பது N என்பது போல் உள்ளது என்றால் சரிதான். initial க்கு அப்பறம் உள்ள புள்ளி வைப்பதில் மாறுபாடுகள் இயற்கையாக வருவதற்கு வாய்ப்பு உள்ளது. initial க்கு பின்னர் கையெழுத்தின் முதல் எழுத்து சற்று தள்ளி போகும் என்றால் இயற்கையாக வருவதற்கு வாய்ப்பு உள்ளது. Q என்ற புரோநோட்டில் உள்ள (த) என்ற கையெழுத்து நேராக உள்ளது என்றால் சற்று சாய்ந்த நிலையில் உள்ளது. 2015 ல் போடப்பட்ட கையொப்பங்கள் ஒப்பிட்டு பார்த்தால் தான் தெளிவான முடிவுக்கு சொல்லலாம் என்றாலும், நீதிமன்றங்கள் மூலமாக அனுப்பப்படும் ஆவணங்களை ஆய்வு செய்து கையெழுத்து குணாதிசயங்கள் அடிப்படையில் தீர்மானிக்கலாம். ஒருவர் சில காலகட்டங்களுக்கு பின்னர் தன் கையெழுத்தை மாற்றிபோட வாய்ப்பு உள்ளது என்றால் அதை என்னால் சொல்லமுடியாது.

Q மற்றும் A1–A5, S1–S6 ஆகியவற்றில் எழுதும் திறனில் வேறுபாடு உள்ளது என எனது ஆய்வு அறிக்கையில் சொல்லியுள்ளேன். Alignment ஒத்துக்கொள்ளப்பட்ட கையொப்பங்களில் Right angle ல் உள்ளது, Q என்பதில் நேராக உள்ளது.

கையெழுத்தில் புள்ளி வைக்கும்போது இயற்கை மாறுபாடு ஏற்படும் ஆனால் அதனுடைய அசல் தன்மையில் மாற்றம் வராது. A1–A5, S1–S6 and Q என்பதில் ங் என்ற எழுத்து ஒத்துக்கொள்ளப்பட்ட கையொப்பங்ளில் உள்ள ங் என்ற புள்ளியையும் பிரச்சனைக்குறிய ங் என்ற புள்ளி மாறுபாடுகளை மொத்தமாக ஆய்வு செய்து வித்தியாசத்தை எனது அறிக்கையில் கூறியுள்ளேன். நான் குறிப்பிட்டு ங் என்ற வித்தியாசத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. Qல் உள்ள ங் என்ற எழுத்திற்கும், ஒத்துக்கொள்ளப்பட்ட கையெழுத்தில் உள்ள ங் என்ற எழுத்திற்கும் மேல் உள்ள புள்ளி ஒரே மாதிரிதான் உள்ளது என்றால் சரியல்ல. த, ங், க, ர, ா ஆகிய எழுத்துகளின் அளவீட்டில் வித்தியாசங்கள் உள்ளது என்று எனது அறிக்கையில் குறிப்பிட்டப்பட்டது சம்பந்தமாக விளக்கம் எதுவும் சொல்லாமல் வித்தியாசம் உள்ளது என சொல்லியிருப்பது தவறானது என்றால் சரியல்ல.

A2, ங் என்ற எழுத்திலும் ங் என்ற எழுத்து மேலே ஒரு கோடு இழுக்கப்பட்டு அதன் பின்னர் புள்ளி வைக்கப்பட்டது என்றால் சிறிதளவு வைக்கப்பட்டது. மேற்படி வேறுபாடும் இயற்கையாக மாறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். S5–S6 ல் ங் என்ற எழுத்திற்கு மேலே சிறிது பிறை மாதிரி இழுத்து எழுத்து உள்ளது என்றால் சரியல்ல. S3,S2 ல் உள்ள ங் என்ற எழுத்திற்கும் S5,S6 எழுத்திற்கும் இயற்கை மாறுபாடு உள்ளது. எனது ஆய்வறிக்கையில் 6வது காரணமாக சொல்லப்பட்டுள்ள எழுத்துக்கள் முடிக்கப்படும் விததத்தில் வேறுபாடுகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். அதை எழுத்துகளின் அமைப்பை வைத்து குறிப்பிட்டேன். ஒருவர் கையெழுத்து போடும்போது வளைவுகள் மற்றும் எழுத்துக்கள் ஆராம்பிக்கப்படும் இடம், வட்டங்கள், புள்ளி ஆகியவற்றில் இயற்கையாக மாறுபடும் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.1 ஆய்வறிக்கை சரியான காரண காரியங்களின் அடிப்படையில் கையெழுத்துகளில் உள்ள மாறுபாட்டை விளக்கும் வகையில் இல்லை என்றும் அதனால் எனது ஆய்வறிக்கை ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல.

ஓம்.M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.